# மெட்ரோ ரயில் கட்டணம் குறைப்பு: நாளை முதல் அமல்

## முதல்வர் பழனிசாமி அறிவிப்பு

**சென்னை, பிப்.20:** சென்னை
யில் மெட்ரோ ரயில் கட்டணத்தை
குறைத்து முதல்வர் எடப்பாடி
கே. பழனிசாமி உத்தரவு பிறப்பித்
துள்ளார். வரும் திங்கள்கிழமை
(பிப்.22) முதல் புதிய கட்டணம்
அமலுக்கு வரும் என்றும் அவர்
தெரிவித்துள்ளார்.

சென்னையில் போக்குவரத்து
நெரிசலைக் குறைக்கும் வகையில்,
45 கிலோ மீட்டர் தொலைவுக்கு
முதல் கட்ட மெட்ரோ
ரயில் திட்டம் நிறைவடைந்து,
விமானநிலையம்-வண்ணாரப்
பேட்டை நீல வழித்தடத்திலும்,
சென்னை சென்ட்ரல் –
பரங்கிமலை வரை பச்சை வழித்
தடத்திலும் மெட்ரோ ரயில் சேவை
தொடங்கியது. இந்த இரு வழித்த
டத்தில் கரோனா பொது முடக்கத்
துக்கு முன்பு தினசரி சராசரியாக
ஒரு லட்சம் பேர் பயணம் செய்த
னர். பொது முடக்க தளர்வுக்குப்
பிறகு, கடந்த ஆண்டு செப்டம்ப
ரில் ரயில் சேவை மீண்டும் தொடங்
கியது. இந்த வழித்தடத்தில் தற்
போது தினசரி 50 முதல் 60 ஆயி
ரம் பேர் பயணம் செய்து வருகின்
றனர்.

**கட்டணத்தை குறைக்கக் கோரிக்கை:** வண்ணாரப்பேட்டை
முதல் திருவொற்றியூர் விம்கோ
நகர் வரை 9.051கி.மீ. தொலை
வில் முதல்கட்ட நீட்டிப்பு திட்டப்
பணிகள் முடிந்து, ரயில் சேவை
கடந்த வாரம் தொடங்கியது. இந்த
வழித்தடத்தில் தினசரி சராசரியாக
10 ஆயிரம் பேர் பயணம் செய்து
வருகின்றனர். இந்த வழித்தடத்தில்
குறைந்த பட்ச கட்டணம் ரூ.10 ஆ
கவும், அதிகபட்ச கட்டணம் ரூ.70
ஆகவும் உள்ளது. மெட்ரோ ரயில்
கட்டணத்தைக் குறைக்க வேண்டும்
என்று பொதுமக்கள் கோரிக்கை
வைத்து வந்தனர்.

இந்நிலையில், சென்னையில்
மெட்ரோ ரயில் கட்டணத்தை
குறைத்து முதல்வர் எடப்பாடிகே.
பழனிசாமி
சனிக்கிழமை உத்தரவு பிறப்பித்
துள்ளார். வரும் திங்கள்கிழமை
முதல் புதிய கட்டணம் அமலுக்கு
வரும் என்றும் அவர் தெரிவித்துள்
ளார். இது குறித்து அவர் வெளி
யிட்ட அறிவிப்பு:-

பெருநகர சென்னையில் போக்
குவரத்து நெரிசலைக் குறைப்பதற்
காகவும், மக்களின் பயண நேரத்
தைக் குறைப்பதுடன், பயணம்
எளிமையாகவும், வசதியாகவும்
அமைக்கும் நோக்கில் மெட்ரோ
ரயில் திட்டத்தை செயல்படுத்துவ
தற்கான முயற்சியை மறைந்த முன்
னாள் முதல்வர் ஜெயலலிதா எடுத்
தார். இந்த திட்டத்தை செயல்ப
டுத்தத் தேவையான நிதி ஒதுக்கீடு
செய்தார்.

சென்னை மெட்ரோ ரயில்
திட்டத்தை தமிழக அரசு மிகுந்த
முனைப்புடன் செயல்படுத்தி
வருகிறது. தற்போது முதல் கட்ட
திட்டம் முழுமையாக முடிக்கப்
பட்டு, 54.15 கி.மீ. தொலை
வில் பயணிகள் சேவை
நடைபெறுகிறது. மேலும்,
118.90 கி.மீ. தொலைவில்
இரண்டாம் கட்ட மெட்ரோ
ரயில் திட்டத்துக்கு அடிக்கல்
நாட்டப்பட்டுள்ளது.



சென்னை மெட்ரோ ரயில்
சேவை கடந்த 2015–ஆம்
ஆண்டு ஜூன் 29–ஆம் தேதி
தொடங்கியது. 5 ஆண்டு
கள் மெட்ரோ ரயில்
சேவை வெற்றிக
ரமாக முடிந்து,
6– ஆம் ஆண்
டில் சேவையை தொடர்கிறது. இது
வரை 7.25 கோடி பேர் மெட்ரோ
ரயில் சேவைகளைப் பயன்படுத்தி
யுள்ளனர்.

மெட்ரோ ரயில்
சேவையைப் பெரு
வாரியான மக்
கள் பயன்படுத்
தும் வகையில்,
அதன்கட்டணத்
தைக் குறைக்க
வேண்டும்
என்று
பொதுமக்களிடமிருந்து கோரிக்
கைகள் வந்தது. இந்த கோரிக்கை
களை ஏற்று, சென்னை மெட்ரோ
ரயில் கட்டணம் குறைக்கப்படவுள்
ளது. இந்த உத்தரவு வரும் திங்கள்
கிழமை (பிப்.22) முதல் அமலுக்கு
வரவுள்ளது.

**20 சதவீதம் தள்ளுபடி:** க்யூ.
ஆர். கோடு மற்றும் சென்னை
மெட்ரோ ரயில் நிறுவனத்தின்
தொடுதல் இல்லா மதிப்புக்கூட்டு
பயண அட்டை மூலம் பயணிப்ப
வர்களுக்கு மேலும் கூடுத
லாக அனைத்து பய
ணச்சீட்டுகளுக்
கும் அடிப்
படை கட்ட
ணத்தில்
இருந்து
20 சதவீதம் தள்ளுபடி அளிக்கப்
படும்.

**குறைக்கப்பட்டதால் கிடைக்கும் பயன்:** 45 கி.மீ. வழித்தடப்
பகுதிகளுக்கான ஒருநாள் வரை
யறுக்கப்படாத மெட்ரோ ரயில்
பயண கட்டணம் ரூ.100 ஆகும்.
தற்போது, வண்ணாரப்பேட்டை
முதல் விம்கோ நகர் வரையிலான
9 கி.மீ. தொலைவு கூடுதல் வழித்த
டத்துக்கும் சேர்த்து, மொத்தம் 54
கி.மீ. வழித்தடத்துக்கு அதே ரூ.100
ஆக இருக்கும்.

45 கி.மீ. வழித்தடப் பகுதிகளுக்
கான ஒரு மாத வரை
யறுக்கப்ப
டாத மெட்ரோ ரயில் பயண கட்ட
ணம் ரூ.2,500 ஆகும். தற்போது
தொடங்கப்பட்டுள்ள வண்ணாரப்
பேட்டை–விம்கோ நகர் வரையி
லான 9 கி.மீ. தொலைவு கூடுதல்
வழித்தடத்துக்கும் சேர்த்து மொத்
தம் 54 கி.மீ. வழித்தடத்துக்கும்
அதே ரூ.2,500 கட்டணம் ஆகும்.

ஞாயிற்றுக்கிழமை மற்றும் பொது
விடுமுறை
நாள்களில்
கட்டணத்
திலிருந்து 50
சதவீத தள்ளுபடி
அளிக்கப்படுகிறது
என்று முதல்வர் பழனி
சாமி அறிவித்துள்ளார்.

| தற்போதைய கட்டணம் | திங்கள் முதல் கட்டணம் |
|---|---|
| 2 கி.மீ. வரை கட்டணம் ரூ. 10 | மாற்றமில்லை |
| 2 கி.மீ. முதல் 4 கி.மீ. வரை ரூ.20 | 2 கி.மீ. முதல் 5 கி.மீ. வரை ரூ.20 |
| 4 கி.மீ. முதல் 6 கி.மீ. வரை ரூ.30 | - |
| 6 கி.மீ. முதல் 12 கி.மீ. வரை 40 | 12 கி.மீ. முதல் 21 கி.மீ. வரை ரூ.40 |
| 12 கி.மீ. முதல் 18 கி.மீ. வரை ரூ.50 | - |
| 18 கி.மீ. முதல் 24 கி.மீ. வலரை ரூ.60 | - |
| 24 கி.மீ. மேல் கட்டணம் ரூ.70 | 21 கி.மீ. முதல் 31 கி.மீ. வரை கட்டணம் ரூ.50 |

